29.12.2016

தினமலர்
உண்மையின் உரைகல்

## மல்பெரி நாற்று உற்பத்தி: விவசாயிகளுக்கு பயிற்சி

பென்னாகரம்: மல்பெரி நாற்று உற்பத்தி குறித்து, பென்னாகரம் பகுதி விவசாயிகளுக்கு, அட்மா திட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை மற்றும் தொழில் நுட்ப மேலாண்மை முகமை சார்பாக, பென்னாகரம் பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு, அட்மா திட்டத்தில், மல்பெரி நாற்று உற்பத்தி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக்கு, பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் சத்தியன் தலைமை வகித்து, மல்பெரி நாற்று உற்பத்தி குறித்தும், இதற்கு அரசு சார்பா வழங்கப்படும் மானியம் குறித்தும் பேசினார். மத்திய பட்டுவாரிய விஞ்ஞானி சின்னத்துரை, விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளித்தார். உதவி ஆய்வளார் வீரமணி, கோவிந்தசாமி, தொழில் நுட்ப உதவியாளர் சதீஷ்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் பசுந்தாள் உர பயிர் விதைகள் வழங்கல்

கிருஷ்ணகிரி: 'மானிய விலையில் வழங்கப்படும், பசுந்தாள் உர பயிர் விதைகளை விவசாயிகள் வாங்கி பயன்பெறலாம்' என, கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சங்கரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மண் வளத்தை மேம்படுத்த பசுந்தாள் பயிர்களான சணப்பை, தக்கைப்பூண்டு ஆகியவற்றை தனி பயிராகவும்,

ஊடு பயிராகவும் மற்றும் பயிர் சுழற்சி முறையில் பயிரிட்டு, மடக்கி உழவேண்டும். பசுந்தாள் உரமிடுவதால், மண் வளத்தை மேம்படுத்தலாம். இதனால், நீர் பிடிப்பு திறன் அதிகரிக்கும். மண் அரிப்பினால் ஏற்படும் இழப்பை குறைக்கும். பயிருக்கு தேவைப்படும் மண்ணின் காற்றோட்டத்தை அதிகரிக்கும். காரத்தன்மையுள்ள நிலத்தை சீர் திருத்துவதற்கு உதவும். மண்ணின் அங்கக பொருட்களின் தன்மையை நிலைப்படுத்துகிறது. பசுந்தாள் உர பயிர்களை நிலத்தில் இடுவதால், 15 முதல், 20 சதவீதம் வரை விளைச்சல் அதிகரிக்கிறது. இத்தகைய பசுந்தாள் உரப்பயிர்களின் விதைகள், சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. இதுகுறித்து மேலும் விவரங்களுக்கு, அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில், வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஏமாற்றம் அளிக்கும்படி கரும்புக்கான தொகை நிர்ணயம்: வெளிநபர்களிடம் விற்க விவசாய சங்கங்கள் முடிவு

ஈரோடு: "கரும்புக்கான விலை நிர்ணயம் ஏமாற்றத்தை அளிப்பதால், ஆலைக்காக பதிவு செய்த கரும்பை வெளி நபர்களிடம் விற்பனை செய்ய, விவசாயிகளை வலியுறுத்துவோம்," என, தற்சார்பு விவசாயிகள் சங்க தலைவர் பொன்னையன் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது: மாநில அரசு, 550 ரூபாய் ஆதார விலையை அறிவித்து, ஒரு டன் கரும்புக்கு, 2,850 ரூபாய் என, விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும். ஆனால், மத்திய அரசின் அறிவிப்பு விலையான, 2,300 ரூபாயை மட்டுமே, கரும்பு ஆலைகள் வழங்குகின்றன. 2,300 ரூபாய்க்கு கூடுதலான தொகையை, மூன்று பருவமாக வழங்காததால், 1,000 கோடிக்கு மேல் விவசாயிகளுக்கு நிலுவைத்தொகை ஆலைகளில் பாக்கியாக உள்ளது. இதை

வழங்க இயலாது என, ஆலை நிர்வாகங்கள் பகிரங்கமாக அறிவிப்பது, விவசாயிகளை ஏமாற்றும் செயல். இதற்கு மத்திய, மாநில அரசுகள் வாய்மூடி உள்ளன. கடந்த மூன்று அரவை பருவமாக, அனைத்து மாவட்டங்களிலும் நடக்கும் வேளாண் குறைதீர் கூட்டத்தில், கரும்புக்கான நிலுவைத்தொகை வழங்க வேண்டும், கரும்புக்கான ஆதார விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்துகின்றனர். அந்தந்த மாவட்ட கலெக்டர்கள், இதை அரசுக்கு தெரிவித்தும், தற்போது விலை உயர்த்தப்படாததும், நிலுவையில் உள்ள தொகையை எவ்வாறு பெற்றுத்தரப்படும் என்ற அறிவிப்பு இல்லாததும், கடும் விரக்தியை ஏற்படுத்துகிறது. வழக்கமாக, கரும்பு அரவை பருவம் துவங்கும் முன், ஆலை நிர்வாகம், விவசாயிகள், அரசுத்தரப்பு என, முத்தரப்பு கூட்டம் நடத்தி, விலை விபரங்களை கேட்டு, செப்., மாதம் விலை அறிவிக்கப்படும். இம்முறை அவ்வாறு இல்லாமல், அரசு தன்னிச்சையாக செயல்பட்டுவிட்டது. இது ஏமாற்றம் அளிக்கிறது. தற்போது மழை இன்றி வறட்சியால், பாதி அளவு தான் கரும்பு விளைந்துள்ளது. ஆலைகளுக்காக பதிவு செய்து கரும்பை, வெட்டுக்கூலியுடன் சேர்த்து, 2,300 ரூபாய்க்கு ஆலை நிர்வாகம் வாங்குகிறது. ஆனால், தனியார் வெல்லம் உற்பத்திக்காக வெட்டுக்கூலியும் கொடுத்து, 2,800 ரூபாய்க்கு மேல் வாங்கி செல்கின்றனர். கடும் வறட்சியால் வெல்லம் தயாரிப்போருக்கு அதிக அளவில் கரும்பு தேவைப்படுகிறது. எனவே, பதிவு செய்த கரும்பை, தனியாரிடம் விற்பனை செய்ய, விவசாயிகளை வலியுறுத்த முடிவு செய்துள்ளோம். இதனால், டன்னுக்கு 1,000 ரூபாய் கூடுதலாக கிடைப்பதுடன், இத்தொகை உடனடியாக விவசாயிகளுக்கு கிடைக்கிறது. ஆலைகள் அரவை செய்து, 45 நாட்களுக்கு மேல் அத்தொகையை இழுத்தடித்து வழங்குகிறது. விவசாயிகளின் இந்த மாற்றத்தால், கரும்பு ஆலைகள் முழு அரவையை செயல்படுத்த முடியாமல் திணறும் நிலை ஏற்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**கரும்புக்கான நிலுவைத்தொகை வழங்க கோரி ஜன., 3ல் ஆலைகள் முன் ஆர்ப்பாட்டம்**

ஈரோடு: "கரும்புக்கான நிலுவைத்தொகையை வழங்க வலியுறுத்தி, ஜனவரி, 3 அன்று தமிழகத்தில் உள்ள அனைத்து கரும்பு ஆலைகள் முன்பும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது" என, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் முனுசாமி கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது: கரும்புக்கான ஆதார விலையாக மத்திய அரசு, 2,300 ரூபாயை அறிவித்தது. கடந்த, 2013-14, 2014-15, 2015-16 ஆகிய ஆண்டுகளிலும் அதே விலை தொடர்கிறது. மாநில அரசு, 550 ரூபாய் அறிவித்து, கரும்பு ஆலைகள் ஒரு டன் கரும்புக்கு விவசாயிகளுக்கு, 2,850 ரூபாய் வழங்க வேண்டும் என்றது. தற்போது இந்த விலையை உயர்த்தாமல், மீண்டும் 2,850 ரூபாயை அறிவித்துள்ளது. இது மிகப்பெரிய அதிருப்தி. தனியார் கரும்பு ஆலைகளுக்கு, தமிழக அரசு ஆதரவாக செயல்படுவது அம்பலமாகிறது. இதனால், தனியார் ஆலைகள், நிலுவைத்தொகையை வழங்க இயலாது என பகிரங்கமாக அறிவிக்கின்றனர். இதை கண்டித்தும், நிலுவைத்தொகை வழங்க வலியுறுத்தி, ஜனவரி, 3 அன்று மாநில அளவில் உள்ள அனைத்து தனியார் கரும்பு ஆலைகள் முன்பும் ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**டெல்டாவில் விடிய விடிய மழை: காய்ந்த பயிர்கள் உயிர் பெறுமா?**

தஞ்சாவூர்: டெல்டா மாவட்டங்களில், விடிய விடிய பெய்ந்த மழையால், விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர்.

வடகிழக்கு பருவமழை காலம், டிச., 31ல் முடிவடையும் நிலையில், இந்தாண்டு பருவமழை சரிவர பெய்யவில்லை. தற்போது, தென்மேற்கு வங்க கடலில், குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, நிலை கொண்டுள்ளது. இதனால், நேற்று முன் தினம் நள்ளிரவு முதல், பரவலாக மழை பெய்து வருகிறது. தஞ்சாவூர்,

திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, பாபநாசம், கும்பகோணம் ஆகிய பகுதிகளில், விடிய விடிய மழை கொட்டி தீர்த்தது. திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களிலும் மழை பெய்தது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. டெல்டா மாவட்டங்களில், பம்ப் செட் மூலம் நடவு செய்யப்பட்ட சம்பா பயிர்கள், மழை இல்லாததால் வாடிய நிலையில் இருந்தன. ஒரு சில இடங்களில், கதிர் வந்த நிலையில், தண்ணீர் பற்றாக்குறை காரணமாக, வாடிய பயிர்களுக்கு உயிர் கொடுக்கும் வகையில், இந்த மழை அமைந்துள்ளது.'இந்த மழை, தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு பெய்தால், காய்ந்த பயிர்களை காப்பாற்ற முடியும்' என, விவசாயிகள் தெரிவித்தனர்.

## வறட்சிக்கு ஏற்ப விவசாயம் செய்ய அதிகாரிகள் ஆலோசனை தேவை

தாண்டிக்குடி, பருவ மழைகள் போக்குகாட்டியதால் மலைப்பகுதியில் விவசாயம் கேள்விக்குறி
யாகியுள்ளது. விவசாயிகளுக்கு வறட்சிக்கு ஏற்ப பயிர் செய்யும் யோசனைகளை அதிகாரிகள் வழங்க வேண்டும். கொடைக்கானல் தாண்டிக்குடி மலைப்பகுதிகளில் விவசாயமே பிரதானம். வடகிழக்கு, தென்மேற்கு பருவமழை கைகொடுத்தால் மட்டுமே இங்கு செழிப்பான விவசாயம் காண முடியும். பருவமழை பொய்த்துள்ள நிலையில் நீர்நிலைகள் வறண்டு நிலத்தடி நீர் அதாலபாதாளத்திற்கு சென்று விட்டது. தாழ்வான பகுதியில் உள்ள தண்ணீரை கொண்டு சிறு விவசாயம் செய்கின்றனர். பனியின் தாக்கம், சுட்டெரிக்கும் வெயில் என வறண்ட வானிலையால் காய்கறி பயிர்கள் வளர்ச்சி பாதித்துள்ளது. எப்போதுமில்லாத வறட்சியால் விவசாயிகள் செய்வதறியாது தவிக்கின்றனர். தற்போதுள்ள தண்ணீரை வைத்து விவசாயம் மேற்கொள்ள திட்டமிட்ட போதும், கைகொடுக்குமா என்ற சந்தேக கனண்ணோட்டத்துடன் பயிர் செய்யும் நிலை உள்ளது. தற்போதுள்ள வறட்சி நிலைக்கு ஏற்ற விவசாயம் மற்றும் சாகுபடி

தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். சம்மந்தப்பட்ட தோட்டக்கலைத்துறை மற்றும் ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் மலைப்பகுதி விவசாயிகளுக்கு வறட்சியில் காய்கறி உற்பத்தி குறித்த ஆலோசாணைகளை வழங்க வேண்டும் என விவசாயிகள் எதிர் பார்க்கின்றனர்.

## குருத்துப்பூச்சி, செவட்டை நோய் தாக்கி நெற்பயிர் சேதம்

சோழவந்தான், சோழவந்தான் பகுதியில் குருத்துப்பூச்சி, செவட்டை நோய் தாக்கி பயிரிட்ட நெற்பயிர் பாதிப்பிற்கு உள்ளானது. சோழவந்தான் வடகரைகண்மாய், பேட்டை, கருப்பட்டி, இரும்பாடி, நாச்சிக்குளம் பகுதியில் ஏ.டி.டி.,45, அக் ஷயா ரக குறுகியகால நெற்பயிர்கள் கிணற்று பாசனத்தில் பயிரிடப்பட்டு உள்ளது. 25 நாள் வளர்ந்த நெற்பயிரில் குருத்துப்பூச்சி மற்றும் செவட்டை நோய் தாக்குதல் தொடங்கி உள்ளது. நோய் தாக்கிய பயிர் நெற்கதிர் மஞ்சளாகி, சிம்புகள் பழுப்பு நிறத்தில் மாறி பாதிப்பு அடையும். இதற்கு மருந்து அடித்தும் நோய் தாக்குதல் குறையவில்லை. நோய்தாக்குதலை கட்டுப்படுத்த முயற்சித்தும் பயனில்லை என்று விவசாயிகள் வருந்துகின்றனர்.

விவசாயி வெங்கடேஷ்: ஏற்கனவே எனது 7 ஏக்கரில் இந்த அக் ஷயா ரக பயிரை பயிரிட்டதில் ஒரு ஏக்கருக்கு குறைந்தது 30 மூடை கூடுதல் மகசூல் பெற்று அதிக லாபம் கிடைத்தது. இப்போதும் அதே நெற்பயிரை பயிரிட்டதில் குருத்துப்பூச்சி, செவட்டை நோய் தாக்கி உள்ளது. பட்டம் தவறியதால் நோய் தாக்குதல் ஏற்பட்டு, நோயை கட்டுப்படுத்த மருந்துகளை அடித்தும் பயனில்லை. ஏக்கருக்கு இதுவரை 12 ஆயிரம் ரூபாய் செலவானது. நோய் பரவாமல் தடுக்க வேளாண்மை துறை நடவடிக்கை எடுக்கவேண்டும், என்றார்.

விவசாயத்தில் இறங்கிய விரிவுரையாளர்!



காசு கொடுத்து வாங்கும் மற்ற பொருள்கள் போல அல்ல விவசாயம். வணிகம் வேறு... விவசாயம் வேறு. ஆராதிக்கப்பட வேண்டிய விவசாயிகள் அனுசரணையாக கூட எங்கும் நடத்தப்படுவதில்லை. விவசாயத்தின் மீது இளைஞர்களின் ஆர்வம் குறைந்ததற்கு பொருளாதார சூழ்நிலையும் முக்கிய காரணமாக உள்ளது. ஆனால், என் குடும்பத்தில் யாரும் விவசாயி இல்லை. அவ்வகையில், நான் முதல் தலைமுறை விவசாயி என்கிறார் அ.ஜெயந்தி. சேலம் கன்னங்குறிச்சி தாமரை நகரைச் சேர்நதவர். வேலையை உதறிவிட்டு விவசாயத்திற்கு வந்துள்ளார்.

முதுகலை இயற்பியல் பட்டதாரியான ஜெயந்தி, எம்.பில் ஆய்வையும் நிறைவு செய்து தனியார் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றி வந்தார். ஆனால் ஒரு கட்டத்தில் தனக்கான இடம் கற்பிப்பது அல்ல என்று உணர்ந்ததாக கூறும் ஜெயந்தி, விவசாயத்தின் மீதான ஆர்வத்தால் இந்த துறையை தான் தேர்ந்தெடுத்ததாக கூறுகிறார்.

திருமணம் முடித்து கன்னங்குறிச்சிக்கு வந்த ஜெயந்தியின் கணவர் அருளின் குடும்பமும் முந்தைய தலைமுறையோடு விவசாயத்தை நிறுத்திவிட்ட நிலையில், மனைவியின் ஆர்வத்தைக் கண்டு அவர் ஊக்குவித்து வருகிறார்.

தன்னுடைய கணவருக்கு சொந்தமான விவசாய நிலத்தை சீர்படுத்திய ஜெயந்தி செயற்கை உரங்களைத் தவிர்த்து, இயற்கை விவசாயத்தை பரவலாக்க வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறார். இயற்கை விவசாயத்திற்கான பரிசோதனைக் களமாக, தன்னுடைய நிலத்தை மாதிரி விவசாய நிலமாக மாற்றி வருகிறார்.

இது குறித்து ஜெயந்தி கூறியது:

"நாள்தோறும் காலை 8 மணிக்கு குழந்தைகள் பள்ளிக்கு கிளம்பியவுடன் விவசாயப் பணிகளில் ஈடுபடுகிறேன். மாலை 4 மணிக்கு பள்ளியில் இருந்து திரும்பியவுடன், இயற்கை ஆர்வத்தை அவர்களுக்கு உருவாக்குவதற்காக விவசாய நிலத்தில்தான் அவர்கள் வீட்டுப்பாடத்தை பயிற்றுவிக்கிறேன். தற்போது என்னுடைய நிலத்தில் கீரை வகைகள், தக்காளி, கிழங்கு வகைகளைப் பயிரிட்டுள்ளேன். செயற்கை உரங்களைப் பயன்படுத்தாது முற்றிலும் இயற்கை விவசாயம் செய்ய வேண்டும் என்பதே எனது குறிக்கோள். இதன் மூலம், பாதுகாப்பான விளைபொருட்களை

உருவாக்க வேண்டும் என்பதே விருப்பமாகும். மேலும், ஜீரோ பட்ஜெட் விவசாயத்தினை மேற்கொண்டு வரும் நான், இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமைதோறும் ஆர்வமுள்ள மற்ற விவசாயிகளுக்கும் கற்றுத் தருகிறேன்.

பெற்ற அன்னைக்கு நிகரான விவசாயிகளின் பங்களிப்பை இன்றைய இளைஞர்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்" என்கிறார்.

ஆசிரியர் பணியை விடுத்து, அழிந்து வரும் விவசாயத்தை காப்பாற்ற களம் புகுந்து இருக்கும் ஜெயந்தியின் தைரியமான முயற்சி அனைவராலும் பாராட்டப்பட வேண்டியது என்றால் அது மிகையல்ல.

- ஜி.விஜயகுமார்

## குறைந்தபட்ச அளவை நோக்கி சரிகிறது மேட்டூர் அணை நீர்மட்டம்



நீர்மட்டம் 37 அடியாகச் சரிந்துள்ள மேட்டூர் அணை.

பருவமழை பொய்த்ததாலும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி கர்நாடகம் தமிழகத்துக்கு உரிய காவிரி நீரை வழங்காத காரணத்தாலும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்தபட்ச அளவை நோக்கி சரிகிறது.

மேட்டூர் அணையில் 120 அடி வரை 93.47 டி.எம்.சி தண்ணீரைச் சேமிக்கலாம். ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி முதல் ஜனவரி 28ஆம் தேதி வரை காவிரி டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும். முதன்முதலாக 1934ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. 12 காவிரி டெல்டா மாவட்டங்களில் 16.05 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

மேட்டூர் அணை கட்டப்பட்ட பிறகு 1961ஆம் ஆண்டு அதிகபட்சமாக அணைக்கு வினாடிக்கு 3,01,052 கன அடி தண்ணீர் வந்தது. 1961ஆம் ஆண்டு அதிகபட்சமாக மேட்டூர் அணையிலிருந்து வினாடிக்கு 2,84,606 கன அடி தண்ணீர் உபரிநீராக வெளியேற்றப்பட்டது. 1961ம் ஆண்டு ஜூலை 20ஆம் தேதி மேட்டூர் அணையில்

அதிகபட்சமாக 124.85 அடி தண்ணீர் தேக்கப்பட்டது. அப்போது அணையின் நீர் இருப்பு 100.742 டி.எம்.சியாக இருந்தது.

மேட்டூர் அணையில் உள்ள மீன்வளத்தைப் பாதுகாக்கவும், பல்வேறு குடிநீர்த் திட்டங்களுக்காகவும் அணையில் குறைந்தபட்சம் 9.6 டி.எம்.சி தண்ணீரை இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும். 1946ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் தேதி மேட்டூர் அணையின் வரலாற்றில் மிகக் குறைந்த அளவாக அணையின் நீர்மட்டம் 6.40 அடியாக இருந்தது. அப்போது அணையில் 0.982 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே இருப்பு இருந்தது.

இந்த நிலையில், நிகழாண்டு தென்மேற்குப் பருவமழையும், வட கிழக்குப் பருவமழையும் கைகொடுக்காத காரணத்தாலும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி கர்நாடகம் தமிழகத்துக்கு உரிய நீரை வழங்காத காரணத்தாலும், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு புதன்கிழமை காலை நொடிக்கு 102 கன அடியாகச் சரிந்துள்ளது.

நீர் வரத்து வெகுவாகச் சரிந்த நிலையில், அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 750 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. மீண்டும் காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் வரை மேட்டூர் அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக அதிகபட்சமாக நொடிக்கு 2000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட வேண்டும்.

இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் மிகக் குறைந்த அளவை நோக்கிச் செல்லும் நிலை உள்ளது. புதன்கிழமை அணையின் நீர்மட்டம் 37.49 அடியாகச் சரிந்தது. அணையின் நீர் இருப்பு 10.83 டி.எம்.சி. கடந்த 5 ஆண்டுகளாக தமிழகத்தில் காவிரி டெல்டா சாகுபடிக்கு போதிய தண்ணீர் வழங்க முடியாமல்

விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டிலும் இதே நிலை நீடிக்கும் அபாயம் உள்ளதாக டெல்டா விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## வருவாய் பகிர்மான கொள்கைபடி கரும்பு விலை நிர்ணயம்

விவசாயிகள், சர்க்கரை ஆலைகளுக்கு ஏற்றவாறு, வருவாய் பகிர்மானக் கொள்கையின்படி கரும்பு விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என தமிழக அரசிடம் தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இதுகுறித்து அந்தச் சங்கத்தின் தலைவர் பழனி ஜி.பெரியசாமி புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 3 ஆண்டுகளில் உற்பத்திச் செலவைவிட சர்க்கரை விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் மிகவும் குறைந்ததால், தமிழகத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.1,350 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் நடப்பு பருவத்தில் சர்க்கரை ஆலைகளின் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதன் காரணமாக, கடந்த மூன்று அரைவைப் பருவங்களில் மத்திய அரசு நிர்ணயம் செய்த சட்டப்பூர்வமான ஆதார விலையை கரும்பு விவசாயிகளுக்கு வழங்குவதற்கே தமிழக சர்க்கரை ஆலைகள் திணறின. மத்திய அரசு வழங்கிய கடன்கள் மூலமே சர்க்கரை ஆலைகளால் நியாயமான விலை வழங்க முடிந்தது. இந்தக் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான தவணை நடப்பு பருவத்திலிருந்து தொடங்குவதால், இதற்கான கூடுதல் ஆதாரங்களையும் ஒழுங்கு செய்ய வேண்டிய நிலையில் சர்க்கரை ஆலைகள் உள்ளன.

இருப்பினும், கரும்பு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, நடப்பு பருவத்தில் நியாயமான, ஆதாய விலைக்கு மேலாக டன் ஒன்றுக்கு ரூ.125 கூடுதலாக வழங்கவும், கரும்பை ஆலைக்கு கொண்டு வருவதற்கான போக்குவரத்துச் செலவை அளிக்கவும் தனியார் சர்க்கரை ஆலைகள் இசைந்துள்ளன.

இந்த நிலையில், வருவாய் பகிர்மானக் கொள்கையின்படி கரும்பு விலை நிர்ணயம் செய்யப்பட்டால் கரும்பு விவசாயிகள், சர்க்கரை ஆலைகளுக்கு நியாயமானதாகவும், ஏற்புடையதாகவும் இருக்கும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

அதிகாலை குளிர் எதிரொலி ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் விற்பனை நேரம் நீட்டிப்பு

கோவை: கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை தினமும் அதிகாலை 4 மணிக்கு திறக்கப்படுகிறது. காலை 10 மணிக்கு மூடப்படுகிறது. இங்கு, பெரியநாயக்கன்பாளையம், தொண்டாமுத்தூர், மதுக்கரை பகுதிகளை சேர்ந்த 150க்கு மேற்பட்ட விவசாயிகள், தங்களது காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இதுதவிர, நீலகிரி, மலை காய்கறிகளை மகளிர் சுயஉதவி குழுவினர் எம்.ஜி.ஆர்.,மார்க்கெட்டில் கொள்முதல் செய்து, இங்கு விற்பனை செய்கின்றனர்.

இங்கு, ஆர்.எஸ்.புரம், சாயிபாபாகாலனி, பூ மார்க்கெட் ஆகிய பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அதிகாலையில் வந்து, காய்கறி வாங்கி செல்கின்றனர். மேலும் கோவையின் இதர பகுதிகளை சேர்ந்த மக்கள் பலர், இருசக்கர

வாகனங்களிலும், கார்களிலும் வருகை தந்து, காய்கறி கொள்முதல் செய்கின்றனர். தினசரி 5 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் காலை 5 மணி முதல் 7 மணிக்குள்ளும், 3 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் 9 மணிக்குள்ளும் வந்து காய்கறி வாங்கி செல்வது வழக்கம். சராசரியாக 80 டன் காய்கறி ரூ.17 லட்சத்திற்கு விற்பனையாகிறது. தற்போது, மார்கழி மாதம் என்பதால், கடந்த 2 வாரங்களாக அதிகாலையில் கடும் குளிர் நிலவுகிறது. இதனால், உழவர் சந்தைக்கு வரும் மக்கள், 2 மணி நேரம் தாமதமாக வருகின்றனர். இதை கருத்தில்கொண்டு, விற்பனை நேரம் காலை 11 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

## திருச்சி மாவட்டத்தில் பரவலாக மழை

திருச்சி : திருச்சி மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு துவங்கி நேற்று மாலை 4 மணி வரை மழை அளவு (மிமீயில்): லால்குடி 3.2, திருச்சி விமான நிலையம் 2.3, நவலூர் குட்டப்பட்டு 5.6, நந்தியார் தலைப்பு 16, வாத்தலை 2.7, தேவிமங்கலம் 2, கோவில்பட்டி 4.2, துவாக்குடி 5 என பதிவாகி உள்ளது.

## அரசு அறிவித்துள்ள கரும்பு ஆதாய விலை ஏமாற்றம் அளிக்கிறது விவசாயிகள் அதிருப்தி

திருச்சி : கரும்புக்கு இந்த ஆண்டு ஆதாய விலையாக டன் ஒன்றுக்கு ரூ.2850 என நிர்ணயித்து தமிழக அரசு அறிவித்தது. மத்திய அரசு நிர்ணயித்த ஆதாய விலையான ரூ.2,300 என்பதற்கு பதில், தமிழக கரும்பு விவசாயிகள் டன் ஒன்றுக்கு ரூ.2,850 அதாவது கூடுதலாக ரூ.550 பெற வழிவகை ஏற்பட்டுள்ளதாக முதல்வர் பன்னீர்செல்வம் தெரிவித்திருந்தார். இந்த அறிவிப்பு விவசாயிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து விவசாய சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கை: தென் இந்திய கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் ராஜ்குமார்: தமிழக அரசின் ஆணைகளை நம்பி 2013-14, 2014-15. 2015-16

ஆகிய 3 பருவத்திலும் பல துயரஙக்ளுக்கிடையே சாகுபடி செய்த கரும்பை பதிவு செய்த ஆலைகளுக்கு சப்ளை செய்த வகையில் நிலுவையாக வைத்துள்ள பாக்கி பணத்தை இன்று வரை பட்டுவாடா செய்யாமல் உள்ள தொகையே ரூ.2 ஆயிரம் கோடி. கடந்த 5 ஆண்டு களில் ஊக்கத் தொகை உயர்த்தாமல் குறைத்தே முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு செய்துள்ளார்.

பருவமழை பொய்த்து, நிலத்தடி நீர் அதலபாதாளத்துக்கு சென்றுள்ள நிலையில் திடீர் புயல் சேதாரங்களால் விவசாயிகள் வாழ்வாதாரத்தையே இழந்துள்ளனர். தமிழக அரசு டன்னுக்கு ரூ.2,850 அறிவித்திருப்பது எரியும் நெருப் பில் எண்ணெய்யை ஊற்றுவதுபோல் உள்ளது. விலைவாசி உயர்வு அடிப்படையில் இவ்விலையை திரும்ப பெற்று வயல் விலையாக டன்னுக்கு ரூ.3,500 என அறிவிக்க வேண்டும். தமாகா விவசாய பிரிவு மாநில தலைவர் புலியூர் நாகராஜன்: ஆண்டுதோறும் மத்திய அரசு ஆதார விலையும், மாநில அரசு ஊக்கத்தொகையும் கணக்கிட்டு வழங்கினாலும் எந்த சர்க்கரை ஆலையயும் அரசு உத்தரவை மதிப்பதாக தெரியவில்லை. போராட்டங்கள் நடத்தியும் மிக குறைவாக விலை அறிவித்திருப்பது விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிக்கிறது. தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் அய்யாக்கண்ணு: மத்திய, மாநில அரசுகள் கரும்புக்கான விலையை அறிவிக்கின்றன.

ஆனால், இதை அமல்படுத்த வேண்டிய 42 சர்க்கரை ஆலைகளில் ஒரு தனியார் ஆலையை தவிர மற்ற அனைத்தும் விவசாயிகளை ஏமாற்றும் நடவடிக்கையைதான் மேற்கொண்டு வருகின்றன. சர்க்கரை ஆலைகள் கோடிக்கணக்கில் நிலுவை தொகை தராமல் விவசாயிகளை இழுத்தடிப்பு செய்த நிலையில் அரசின் அறிவிப்பு விவசாயிகளுக்கு எந்த பயனையும் தராது. தமிழக ஏரி, ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநில தலைவர் விஸ்வநாதன்: விவசாயிகளை ஏமாற்றும் வெற்று அறிவிப்பு இது. தமிழகத்தில் உள்ள தனியார், கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளும் தமிழக அரசு பரிந்துரை விலை

ஏற்கனவே டன்னுக்கு ரூ.450 உள்ளது. தமிழகம் முழுவதும் கரும்பு விவசாயிகளுக்கு தரவேண்டிய கரும்புக்கான பாக்கி தொகை ரூ.1350 கோடியை தமிழக அரசு எப்போது விவசாயிகளுக்கு பெற்றுத் தர போகிறது, தற்போது கரும்பு டன்னிற்கு பரிந்துரை விலை ரூ.550 கரும்பு ஆலைகளிடமும் பெற்றுத்தரப்படுமா என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக திமுக, காங்கிரஸ் உள்பட அனைத்து கட்சிகளும் சட்டமன்ற கூட்டத்தில் குரல் எழுப்ப வேண்டும்.

## துறையூர் பெரிய ஏரிக்கரையில் 4,600 பனை விதை ஊன்றும் பணி

துறையூர் : துறையூர் பெரிய ஏரிக்கரையில் 4,600 பனை விதை ஊன்றும் பணி நடந்தது. துறையூர் மக்கள் நல சங்கம், கோல்டன் சிட்டி ரோட்டரி கிளப், சுதர்சனா பாலிடெக்னிக் கல்லூரி, பொதுப்பணித்துறை, வனத்துறை சார்பில் துறையூர் பெரிய ஏரிக்கரையில் 4600 பனை விதை ஊன்றும் பணி நடந்தது. இதற்கான பனை விதைகளை வனத்துறை துறையூர் கோட்ட வனசரகர் ரவி கிருஷ்ணன் தந்தார். பணிகளை துவக்கி வைத்து பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் முருகேசன் பேசுகையில், பனைமரம் வறட்சியை தாங்கி நிலத்தடி நீரை சேமித்து வளரும். பதநீர், நுங்கு, பனைவெல்லம், பனகற்கண்டு, பனை ஓலை, பனை விசிறி உள்ளிட்ட பொருட்கள் நமக்கு பயன்படுகின்றன. இந்த பணிகளை செய்யும் பொதுநல அமைப்பினரை பாராட்டி எனது சொந்த பணத்திலிருந்து ரூ.5000 நன்கொடையாக தருகிறேன் என கூறி பாராட்டினார். நகராட்சி தனி அலுவலர் நாகேந்திரன், சுதர்சனா பாலிடெக்னிக் முதல்வர் பூபாலன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

## ரூபாய் நோட்டு பிரச்னையால் வேலை இழந்த மேட்டூர் அணை மீனவர்கள் கருவாடு உற்பத்தி தொடக்கம்

மேட்டூர்: மேட்டூர் அணையை நம்பி மீன்பிடி தொழிலில் இரண்டாயிரத்துக்கும் மீனவர்கள் நேரடியாகவும், மறைமுகமாக இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் கூலி அடிப்படையில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 37 அடியாக சரிந்துள்ளதால் காவிரி நீரோடை போல மாறியுள்ளது.இதனால் அடிப்பாலாறு, ஏமனூர், சொட்டிப்பட்டி, நாகமரை, ஒட்டனூர், கோட்டையூர், சேத்துக்குழி, பண்ணவாடி பகுதிகளில் மீனவர்களுக்கு மீன்கள் கிடைப்பதில்லை.
கிடைக்கும் குறைந்த அளவு மீன்களை சில்லறை விற்பனையில் விற்பனை செய்யும் தொழிலாளர்களுக்கு பணத்தட்டுப்பாடு பிரச்னையால் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால், காவிரி கரையில் இருந்த பெரும்பாலனா மீனவர்கள், தங்களின் முகாம்களை மூடிவிட்டு பிழைப்பு தேடி வேறு பகுதிகளுக்கு சென்றனர்.

பணத்தட்டுப்பாடு காரணமாக புதியதாக வேலைக்கு செல்வோருக்கு வேலை கிடைப்பதில்லை. வேலை கிடைத்தாலும் உரிய நேரத்தில் கூலி கிடைப்பதில்லை. இதனால் வெளி மாநிலம், மாவட்டங்களுக்கு சென்ற மீனவர்கள், மீனவ கூலி தொழிலாளர்கள் மீண்டும் மேட்டூருக்கே திரும்பி விட்டனர். இவர்கள் சேத்துகுழி அருகே மீண்டும் தங்களின் பரிசல்களையே கூடாரமாக்கி தங்கியுள்ளனர். அப்பகுதியில் தேங்கி குட்டை போல காணப்படும் காவிரியில் பிடிபடும் சிறு சிறு மீன்களை பிடித்து, உணவுக்காவும், விற்பனைக்காக கருவாடாக்கி உலர்த்தி வைத்துள்ளனர். இதுகுறித்து மீனவர்கள் கூறியதாவது: அணையில் தண்ணீர் வற்றியதால், குறைந்த அளவில் சிறுவகை மீன்கள் கிடைக்கிறது. அதை விற்பணைக்கு எடுத்து சென்றாலும் பணத்தட்டுப்பாடு காரணமாக சொற்ப விலைக்கே விற்பனையாகிறது. இதனால் கிடைத்த விலைக்கு விற்று விட்டு,

எஞ்சிய மீன்களை கருவாடாக மாற்றிட உலர்த்தி காயவைக்கும் பணியை மேற்கொண்டுள்ளோம் என்று கூறினார்.

## சணப்பை, தக்கைப்பூண்டு பசுந்தீவன பயிர் உற்பத்திக்கு உதவி மானிய விலையில் விதை விநியோகம் வேளாண் இணை இயக்குநர் தகவல்

கிருஷ்ணகிரி: மான்ய விலையில் பசுந்தாள் உர பயிர் விதைகளை வாங்கி பயன்பெற விவசாயிகளுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சங்கரன் அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பயிர்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்து பயிர்கள் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 555 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. பெருகி வரும் மக்கள் தொகையால் நிகர சாகுபடி பரப்பு தொடர்ந்து குறைந்து வரும் நிலையில் அனைத்து மக்களுக்கும் உணவளிக்க குறைந்த அளவு நிலத்தில் தொடர் பயிர் சாகபடி செய்து, உற்பத்தியை பெருக்க வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறு தொடர் சாகுபடி செய்வதால் மண்ணின் வளம் குன்றி, மகசூல் குறைவு ஏற்படுகிறது.

உற்பத்தியை அதிகரிக்க அதிகளவில் ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகிறது. இதனால், மண்ணின் வளம் பாதிக்கப்பட்டு அங்க சத்து குறைபாடு ஏற்படுகிறது. மண் வளத்தை மேம்படுத்திட பசுந்தாள் பயிர்களான சணப்பை, தக்கைப்பூண்டு ஆகியவற்றை தனி பயிராகவும், ஊடு பயிராகவும் மற்றும் பயிர் சுழற்சி முறையில் பயிரிட்டு மடக்கி உழவேண்டும். இவ்வாறு பசுந்தாள் உரமிடுவதால் மண் வளத்தை மேம்படுத்தலாம். இதனால், நீர் பிடிப்பு திறனை அதிகரிக்கும். மண் அரிப்பினால் ஏற்படும் இழப்பை குறைக்கும். பயிருக்கு தேவைப்படும் மண்ணின் காற்றோட்டத்தை அதிகரிக்கும். காரத்தன்மையுள்ள நிலத்தினை சீர்திருத்துவதற்கு உதவும். மண்ணின் அங்கக பொருட்களின் தன்மையை நிலைப்படுத்துகிறது.

பசுந்தாள் உரப்பயிர்கள் மக்குவதால் சாகுபடி பயிர்களுக்கு ஊட்டச்சத்துகள்

கிடைக்கின்றன. பயிர்களுக்கு அளிக்கப்படும் ரசாயன உரங்களின் அளவு எடுத்துக்கொள்ளும் திறன் அதிகரிக்கிறது. பசுந்தாள் உர பயிர்கள் நிலத்தில் இடுவதால் 15 முதல் 20 சதவீதம் வரை விளைச்சலை அதிகரிக்கிறது. இத்தகைய பசுந்தாள் உரப்பயிர்களின் விதைகள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. மான்ய தொகைகளை பெற்றிட விவசாயிகள் அனைவரும் பசுந்தாள் பயிர்கள் சாகுபடி செய்திட ஆர்வலம் செலுத்த வேண்டும். விளை நிலங்களில் சாகுபடி செய்யப்படும் பயர்களில் அதிக மகசூலும், கூடுதல் வருமானமும் பெற வழி ஏற்படுகிறது.

மேலும், விவரங்களுக்கு அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில், வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு மான்ய விலையில் பசுந்தாள் உர பயிர் விதைகளை வாங்கி பயன்பெறு வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் வேளாண்மை இணை இயக்குநர் சங்கரன் தெரிவித்துள்ளார்.

## வேப்பனஹள்ளி அருகே நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி

கிருஷ்ணகிரி: வேப்பனஹள்ளி அருகே நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி அளிக்கப்பட்டது.

வேப்பனஹள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத்துறை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின்கீழ், மணியாண்டப்பள்ளி பகுதி விவசாயிகளுக்கு நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை விளக்க பயிற்சி முகாம் நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் ஜான்லூர்து சேவியர் பயிற்சினை துவக்கி வைத்து, திருந்திய நெல் சாகுபடி முறைகள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கி கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் நேரு, நெல்லில் இயந்திர நடவு முறைகள் குறித்து பயிற்சி அளித்தார். நெல் விதைகளை அசோஸ்பைரில்லத்துடன் விதை நேர்த்தி செய்யும் முறை குறித்து உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம் செல்விளக்கம் செய்து காண்பித்தார். முன்னதாக அனைவரையும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சின்னசாமி வரவேற்றார்.

## மலம்பட்டி கிராமத்தில் விதை நேர்த்தி செய்தல் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி

விராலிமலை : மலம்பட்டி கிராமத்தில் விதை நேர்த்தி செய்தல் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. விராலிமலை வட்டாரத்தில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை வாயிலாக மலம்பட்டி கிராமத்தில் பயறு வகை பயிர்களில் ஒருங்கணைந்த பயிர் மேலாண்மை பற்றிய பயிற்சி வகுப்பு நடைபெற்றது. வட்டார தொழில்நுட்ப குழு அமைப்பாளரும், வேளாண்மைஉதவி இயக்குநருமான எட்வர்டு சிங் தலைமை வகித்து ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றி விளக்கினார். இப்பயிற்சியில் சிறப்பு விருந்தினராக குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய திட்ட துணை இயக்குனர் கணேசன் கலந்து கொண்டு பயறு வகை பயிர்களில் உயர் விளைச்சல், ரகங்கள் மற்றும் அதன் சிறப்பியல்புகள் பற்றியும், உகந்த பருவம், நிலம் தயாரிப்பு, விதை நேர்த்தி செய்தல் மற்றும் விதைப்பு முறைகள் பற்றியும் விளக்கி கூறினார். மேலும் ஒருங்கிணைந்த முறையில் களை மேலாண்மை, ஊட்டச்சத்து மற்றும் நீர் மேலாண்மை, பூச்சி, நோய் மேலாண்மை பற்றியும் விளக்கினார்.

மேலும் இலைவழி ஊட்டச்சத்து கரைசல் தெளிப்பது மற்றும் நாப்தலின் அசிடிக் ஆசிட் தெளித்தல் பற்றியும் சவரிமுத்து என்பவரின் வயலில் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. தற்போது நிலவி வரும் வறட்சியை தாங்குவதற்கு ஏதுவான பொட்டாசியம் குளோரைடு தெளித்தல் பற்றிய தொழில்நுட்பங்களும் விளக்கப்பட்டது. முன்னதாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் லெட்சுமி பிரபா வரவேற்றார். இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடு, குறிப்பேடு வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் கிருஷ்ணசாமி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சுப்பிரமணி, உமாமகேஸ்வரி ஆகியோர் செய்திருந்தனர்.

## வெல்லம் விலை சரிவு: விவசாயிகள் கவலை

க.பரமத்தி : க.பரமத்தி ஒன்றியம் புன்னம் ஊராட்சி பழமாபுரம் மற்றும் வேலாயுதம்பாளையம் பகுதிகளில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது இந்த கரும்புகளை புஞ்சை புகழூரில் உள்ள சர்க்கரை ஆலையில் பதிவு செய்து விவசாயிகள் அனுப்பி வருகின்றனர். பதிவு செய்யாத கரும்புகளை வெல்லம் காய்ச்சும் ஆலைக்கு அனுப்பி வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த வெல்லம் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் நொய்யல் குறுக்குசாலை, வெளி மாவட்ட பகுதிகளுக்கும் குறிப்பாக சோளகாளிபாளையம், வேலூர், ஜேடர்பாளையம் பிலிக்கல்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 20க்கும் மேற்பட்டவை இயங்கி வருகின்றன. இவை அச்சு வெல்லம், உருண்டை வெல்லம் என தயாரிக்கப்படுகிறது.

இந்த வெல்லங்கள் மண்டிக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படுகிறது ஏலம் எடுக்க திண்டுக்கல், மதுரை, திருச்சி, கோவை, நாமக்கல், சேலம் போன்ற பகுதிகளில் இருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்து செல்கின்றனர். கடந்த மாத ஏலத்தின்போது உருண்டை வெல்லம் ஒரு சிப்பம் ரூ.1280, அச்சு வெல்லம் ஒரு சிப்பம் ரூ.1250க்கு ஏலம் போனது. தற்போது நடைபெற்ற ஏலத்தில் உருண்டை வெல்லம் ரூ.1200, அச்சு வெல்லம் ரூ.1200, என ஏலம் போனது. தற்போது இவ்வாறு வெல்லம் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் கரும்பு விவசாயிகள், வெல்லம் உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

## துறையூர் ஏரிக்கரையில் 4,600 பனை விதை நடும் பணி

துறையூர் : துறையூர் பெரிய ஏரிக்கரையில் 4,600 பனை விதை ஊன்றும் பணி நடந்தது. துறையூர் மக்கள் நல சங்கம், கோல்டன் சிட்டி ரோட்டரி கிளப், சுதர்சனா பாலிடெக்னிக் கல்லூரி, பொதுப்பணித்துறை, வனத்துறை சார்பில் துறையூர் பெரிய ஏரிக்கரையில் 4600 பனை விதை ஊன்றும் பணி நடந்தது. இதற்கான பனை விதைகளை வனத்துறை துறையூர் கோட்ட வனசரகர் ரவி கிருஷ்ணன் வரவழைத்து தந்தார். பணிகளை துவக்கி வைத்து பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் முருகேசன் பேசுகையில், பனைமரம் வறட்சியை தாங்கி நிலத்தடி நீரை சேமித்து வளரும். கோடையில் பதநீர், நுங்கு, மனிதர்களின் உடல் சூட்டை தணிக்க உதவும்.

பனைவெல்லம், பனகற்கண்டு, பனை ஓலை, பனை விசிறி உள்ளிட்ட பொருட்கள் நமக்கு பயன்படுகின்றன. இந்த பணிகளை செய்யும் பொதுநல அமைப்பினரை பாராட்டி ஊக்கப்படுத்தும் விதமாக எனது சொந்த பணத்திலிருந்து ரூ.5000 நன்கொடையாக தருகிறேன் என கூறி அனைவரையும் பாராட்டினார். நகராட்சி தனி அலுவலர் நாகேந்திரன், சுதர்சனா பாலிடெக்னிக் முதல்வர் பூபாலன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

## சாமந்தி பூக்கள் பயிரிட விவசாயிகள் ஆர்வம்

விருத்தாசலம்:விருத்தாசலம் பகுதியில் சாமந்திப்பூக்கள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இப்பகுதியில் மணிமுக்தாறு மற்றும் வெள்ளாறு செல்வதால் ஆற்று வண்டல் மண் அதிகம் காணப்படுகிறது. இந்த நிலப்பரப்பில் எண்ணெய் மற்றும் மலர்செடிகள், காய்கறி பயிர்கள் அதிகம் சாகுபடி செய்து வருகின்றனர். மேலும் இப்பகுதியில் சமீப காலமாக மலர் சாகுபடியில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், குப்பநத்தம் கிராமம் செல்லும் சாலையில் விவசாயிகள் சாமந்தி பூக்களை சாகுபடி செய்துள்ளனர்.
பயிரை தொடர்ந்து பயிர் செய்து வரும் குப்பநத்தத்தை சேர்ந்த விவசாயி சிதம்பரம் கூறுகையில், இப்பகுதியில் பயிரிடும் மலர்களை உள்ளூர் பூ வியாபாரிகள் குறைந்த விலைக்கு எடுத்து கொள்கின்றனர். சில வசதியான விவசாயிகள் கோயம்பேடு பூ மார்க்கெட்டுக்கு அனுப்பி வருகின்றனர். ஒரு கிலோ மலர் ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனையாகிறது.

இதேபோல சேப்ளாநத்தம், கோட்டகம், உய்யகொண்டராவி, மணக்கொல்லை, பாலக்கொல்லை விவசாயிகளும் மலர் பயிரிட ஆர்வம் காட்டியுள்ளனர். வெளியூர் அனுப்ப பல்வேறு சிரமங்கள் உள்ளதால் விருத்தாசலத்தை மையமாக வைத்து மலர் சந்தை அமைக்க வேண்டும். மேலும் இப்பகுதி வேளாண்துறை அதிகாரிகளும், தோட்டக்கலைத்துறை அதிகாரிகளும் இணைந்து இதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். மற்ற விவசாய பயிர்களுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை மலர் சாகுபடிக்கும் அளித்து விவசாயிகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தினால் சாமந்தி போன்ற மலர் வகை பயிர்களை பெரும் நிலப்பரப்பில் சாகுபடி செய்யும் சூழ்நிலை ஏற்படும், என்றார்.

## வள்ளலார் பிறந்த மருதூர் கிராமத்தில் கடும் வறட்சிக்கு இடையிலும் அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்கள்

புவனகிரி: வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார் ராமலிங்க அடிகளார். அவர் பிறந்த ஊர் கடலூர் மாவட்டம் புவனகிரி அருகே உள்ள மருதூர் கிராமம். போதிய மழை இல்லாதது, பாசன ஆதாரங்களில் இருந்து தண்ணீர் திறக்காதது போன்றவற்றால் கடலூர் மாவட்டமே வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வயல்களில் காய்ந்து கருகிய பயிர்களை ஆடு, மாடுகள் மேய்ந்து வருகிறது.

இந்நிலையில், அதற்கு மாறாக புவனகிரி அருகே உள்ள மருதூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கொளக்குடி, தலைக்குளம் உள்ளிட்ட கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த நெற் பயிர்கள் நன்றாக காய்ந்து அறு
வடைக்கு தயார் நிலையில் உள்ளது. இப்பகுதிகளில் உள்ள பாசன வாய்க்கால்களுக்கு நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் இருந்து வெளியேறும் சுரங்க தண்ணீர் வருகிறது.

அதனால் இப்பகுதி கிராமங்களில் ஓரளவிற்கு தண்ணீர் தட்டுப்பாடுஇன்றி பாசனம் நடந்து வருகிறது. தேவையான நேரத்தில் கிடைத்த தண்ணீரை கொண்டு விவசாயிகள் முறையாக விவசாயம் செய்ததால் மருதூர் பகுதியில் தற்போது பயிர்கள் செழித்து நன்றாக வளர்ந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. மாவட்டம் முழுவதுமே தண்ணீர் பற்றாக்குறையால் பயிர்கள் காய்ந்துள்ள நிலையில், வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலார் பிறந்த மருதூர் பகுதியில் நெற்பயிர்கள் அறுவடைக்கு தயாராக உள்ளதை விவசாயிகள் நெகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

## பூக்கள் வரத்து குறைந்தது: மல்லிகை ஒருகிலோ ரூ.1500

பொள்ளாச்சி : பொள்ளாச்சி தேர்நிலை பூ மார்க்கெட்டுக்கு சுற்றுவட்டார கிராம பகுதிகளிலிருந்து மட்டுமின்றி மடத்துக்குளம், உடுமலை, கணியூர், நிலக்கோட்டை, கரூர், பழனி, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், நாமக்கல், மதுரை, தேனி மற்றும் பல பகுதியிலிருந்து இருந்து பூக்கள் அதிகளவில் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன. இங்கு வரும் பூக்களை உள்ளூர் வியாபாரிகள் மட்டுமின்றி கேரள மாநிலம் பகுதிகளில் இருந்து வியாபாரிகள் மொத்தமாக வாங்கி செல்கின்றனர். இதில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்புவரை

மார்க்கெட்டுக்கு பூக்களின் வரத்து அதிகமாக இருந்தது. இதனால் அந்நேரத்தில் அனைத்து வகையான பூக்களின் விலை குறைவாக காணப்பட்டது.

கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக பனிப்பொழிவு இருந்ததால், சுற்றுவட்டார பகுதியிலிருந்தும் வெளியூர்களில் இருந்தும் பூ வரத்து மிகவும் குறைந்தது. இதனால் அதன் விலை ஏறுமுகமானது. இருப்பினும் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு தேவையான பூக்களை வாங்கி செல்வதை தொடர்ந்துள்ளனர். இந்த வாரத்திலும், மார்க்கெட்டுக்கு தொடர்ந்து பூக்கள் வரத்து குறைவால் அதன்விலை மிகவும் அதிகரித்துள்ளது. சுமார் 3வாரத்திற்கு முன்பு ஒருகிலோ மல்லிகை மற்றும் முல்லை பூக்கள் ஒருகிலோ ரூ.400 முதல் அதிகபட்சமாக ரூ.500வரை மட்டுமே விற்பனையானது. ஆனால் நேற்றய நிலவரப்படி, ஒருகிலோ மல்லிகை ரூ.1400 முதல் ரூ.1500வரையிலும். முல்லை பூ ரூ.800க்கும் விற்பனையானது. அதுபோல், ஜாதிமல்லி ரூ.650க்கும், பெங்களூர் மல்லி ரூ.800க்கும், அரளி ரூ.210க்கும் என விலை போனது.

## குற்றாலம் மெயினருவியில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு

தென்காசி : வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் இந்தாண்டு குற்றாலம் அருவிகளில் தண்ணீர் வரத்து மிகவும் குறைவாக இருந்தது. இதனால் சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்கள், குற்றாலம் மெயினருவியில் திருப்தியாக குளிக்க முடியாத சூழல் ஏற்பட்டது. பாறையை ஒட்டி விழுந்த தண்ணீரில் தலையை மட்டும் நனைத்து சென்றனர். இந்நிலையில் தற்போது உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக குற்றாலத்தில் நேற்று மதியம் விட்டுவிட்டு மழை பெய்தது. இதன் காரணமாக மாலையில் அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. மெயினருவியில் ஆண்கள் மற்றும் பெண்கள் பகுதியில் தண்ணீர் பரந்து விழுகிறது. ஐந்தருவியில் நான்கு பிரிவுகளில் ஓரளவு தண்ணீர் விழுகிறது.அருவியில் தண்ணீர் நன்றாக விழுந்த போதும் சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டல பூஜை முடிந்து நடை அடைக்கப்பட்டதால் பக்தர்களின் வருகை இல்லை. ஆனால் பள்ளிகளுக்கு

அரையாண்டு தேர்வு விடுமுறை காரணமாக சுற்றுலா பயணிகள் வரத்து மிதமாக காணப்பட்டது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## வேண்டாம் இந்த சீமைக்கருவேல மரம்




பொதுவாக மரம் வளர்ப்போம்!, வளம் சேர்ப்போம்! என்ற கோஷங்கள்தான் உலகம் முழுவதும் எழுப்பப்படுகிறது. ஆனால், இப்போது தமிழகம் முழுவதும் சீமைக்கருவேல மரத்தை வெட்டுவோம்!, வளம் சேர்ப்போம்! என்ற கோஷம் எழும்பத்தொடங்கிவிட்டது. ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவை பூர்வீகமாகக்கொண்ட இந்த சீமைக்கருவேல மரம், பூமிக்கடியிலுள்ள மிகக்கொஞ்சம் தண்ணீரைக்கூட உறிஞ்சிவளர்ந்துவிடும். தண்ணீரே இல்லாவிட்டாலும்கூட, காற்றிலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி, பச்சைப்பசேல் என்று வேகமாக வளரும். தமிழ்நாட்டை பொறுத்தமட்டில், 1960–ம் ஆண்டில் மக்கள் அப்போது விறகுக்காக ஏராளமான மரங்களை வெட்டுகிறார்கள் என்றநிலையில், பயனுள்ள மரங்களை வெட்டுவதை தடுப்பதற்காக வேறெந்த பயனும் இல்லாத இந்த சீமைக்கருவேல மரம் நாடு முழுவதும் வளர்க்கப்பட்டது. விமானம் மூலம் இந்த விதைகளை தூவியதாகக்கூட சிலர் கூறுவார்கள். எல்லா மரங்களும் காற்றிலுள்ள கார்பன்–டைஆக்சைடை உறிஞ்சி, ஆக்சிஜனை வெளியேற்றும்.

ஆனால், இந்த சீமைக்கருவேல மரமோ ஆக்சிஜனை உட்கொண்டு, கார்பன்–டைஆக்சைடை வெளியேற்றி, மக்களுக்கு பெரும் தீமையை விளைவிக்கக்கூடியதாகும்.

இந்த மரத்தின் இலை, காய், விதை என எதுவுமே எந்த உயிரினத்துக்கும் பயன்படாது. இந்த மரத்தில் ஆடு, மாடுகளை கட்டி வளர்த்தால், அவை மலடாகிவிடும் என்று கிராமத்தில் இன்றும் சொல்கிறார்கள். இதன் தீமையை அறிந்துதான், கேரளாவில் எப்படி ஆற்று மணலை எடுக்கத்தடை விதித்தார்களோ, அதுபோல சீமைக்கருவேல மரத்தை ஒழிப்பதற்கும் மிகத்தீவிர நடவடிக்கை எடுத்து, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பே இந்த மரம் இருக்கும் இடங்களை தேடித்தேடிப்போய் வெட்டி, தீயிட்டு கொளுத்தி, இன்று அந்த மாநிலத்தின் எந்த இடத்திலும் சீமைக்கருவேல மரம் இல்லாத ஒரு நிலையை உருவாக்கிவிட்டார்கள். கேரளாவின் நீர்வளத்தை பெருக்குவதற்கு எடுக்கப்பட்ட இதேபோன்ற நடவடிக்கைகளை, தமிழ்நாட்டிலும் எடுக்கவேண்டும் என்பது எல்லோருடைய கோரிக்கையாக இருக்கிறது. தமிழ்நாட்டில் 10 சதுரமீட்டருக்கு ஒரு கருவேல மரம் என்றிருந்து பாதிப்புகளை ஏற்படுத்திய இந்த மரம், தற்போது சராசரியாக 4 சதுரமீட்டர் என்றாகி, விவசாய பரப்பையும் குறைத்துக்கொண்டே இருக்கிறது. இந்த நிலையில், எப்போதுமே சமூக பிரச்சினைக்காக பல்வேறு வழக்குகளை நீதிமன்றத்திலும், பசுமைத்தீர்ப்பாயத்திலும் தொடரும் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மதுரை ஐகோர்ட்டில் இந்த சீமைக்கருவேல மரம் அகற்றப்படுவதற்கும், அப்படி அகற்றிய மரங்களை மீண்டும் வளராமல் இருப்பதற்கும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, இந்த மரங்களை கூண்டோடு ஒழிப்பதற்காக ஒரு வழக்கை தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஏ.செல்வம், பி.ஏ.கலையரசன் ஆகியோர், ஜனவரி 10–ந் தேதிக்குள் மதுரை ஐகோர்ட்டு கிளையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, கரூர் ஆகிய 13 மாவட்டங்களிலும் சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்படவேண்டும். இந்த

உத்தரவை நிறைவேற்றிய தகவலை கோர்ட்டுக்கு ஜனவரி 11–ந் தேதி தெரிவிக்கவேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது. ஏற்கனவே, சட்டசபையில் வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் பேசும்போது, 'தமிழ்நாட்டிலுள்ள 85 ஆயிரத்து 400 குளங்கள், ஏரிகளில் சீமைக்கருவேல மரம் இயற்கையாகவே வளர்ந்துள்ளன. இதுபோல, 46 ஆயிரத்து 65 ஏக்கர் நிலப்பரப்பிலும் சீமைக்கருவேல மரம் வளர்ந்துள்ளது. இவற்றை படிப்படியாக அகற்றி, வேறு மரக்கன்றுகளை நடுவதற்கு அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது' என்றார். இப்போது, 13 மாவட்டங்களிலும் உயர்நீதிமன்ற தீர்ப்புப்படி, சீமைக்கருவேல மரத்தை உடனடியாக அகற்றிதான் தீரவேண்டும். இதே வேகத்தை தமிழ்நாடு முழுவதும் காட்டி, கேரளாவைப்போல, தமிழ்நாட்டிலும் சீமைக்கருவேல மரங்கள் பூண்டோடு அழிக்கப்படவும், அழிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் வளராமல் தடுக்கவும் போர்க்கால அடிப்படையில் முழுவீச்சில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் பலத்த மழை விவசாயிகள் மகிழ்ச்சி

புதுக்கோட்டை மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பலத்த மழை

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வந்தது. இதனால் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சாலையோர கடைகளில் இளநீர், கரும்புச்சாறு போன்றவை மீண்டும் விற்பனைக்கு வந்தது. இந்நிலையில் நேற்று காலையில் புதுக்கோட்டை, மழையூர் பகுதியில் வானம் இருண்ட நிலையில் காணப்பட்டது. அதனை தொடர்ந்து திடீரென பலத்த மழை கொட்டி தீர்த்தது. இதனால் புதுக்கோட்டையில் உள்ள சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கறம்பக்குடி

கறம்பக்குடி பகுதி வானம் பார்த்த பூமியாகும். கடந்த 3 ஆண்டுகளாக

இப்பகுதியில் பருவ மழை சரியாக பெய்யாததால் இத்தாலுகா பகுதியில் உள்ள நீர் நிலைகள் அனைத்தும் தண்ணீர் இன்றி வறண்டன. விவசாயம் பொய்த்து போனதால் வருமானம் இன்றி விவசாயிகள் சிரமப்பட்டு வந்தனர். நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாக குறைந்ததால் குடிநீருக்கு தட்டுபாடு ஏற்படும் நிலை உருவானது. இந்நிலையில் கறம்பக்குடி பகுதியில் நேற்று அதிகாலை முதல் மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கு எடுத்து ஓடியது. நீண்ட காலத்திற்கு பிறகு மழை பெய்ததால் இப்பகுதி விவசாயிகள், பொதுமக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். நெல், கடலை, கரும்பு சாகுபடி செய்திருந்த விவசாயிகளும் திடீரென பெய்த மழையால் மகிழ்ச்சி அடைந்தனர்.

மழையளவு

புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை பெய்த மழையின் அளவு மில்லி மீட்டரில் வருமாறு:- அறந்தாங்கி-4, ஆயிங்குடி-5, நாகுடி-5, கட்டுமாவடி-2, மணமேல்குடி-2,அன்னவாசல்-9, இலுப்பூர்-1, குடுமியான்மலை-13, பொன்னமராவதி-9, கறம்பக்குடி-19, காரையூர்-16, மழையூர்-25, புதுக்கோட்டை-17, பெருங்களூர்-21, ஆதனக்கோட்டை-17, கந்தர்வகோட்டை-13, கீரனூர்-9, உடையாளிப்பட்டி-8, திருமயம்-2, அரிமளம்-5, ஆலங்குடி-10 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

## தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சியால் 70 சதவீதம் பயிர்கள் பாதிப்பு அரசுக்கு முதல் கட்ட அறிக்கை தாக்கல்



தூத்துக்குடி மாவட்டத்தில், வறட்சியால் பயிரிடப்பட்டு இருந்த 70 சதவீதம் பயிர்கள் கருகி விவசாயிகளுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டு உள்ளதாக, தமிழக அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

**கடும் வறட்சி**

தூத்துக்குடி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கிய சில நாட்களில் நல்ல மழை பெய்தது. இதனை நம்பிய மானாவாரி விவசாயிகள் சுமார் 1 லட்சத்து 30 ஆயிரம் எக்டர் பரப்பில் உளுந்து, பாசிப்பயறு, கம்பு, சோளம், மிளகாய், வெங்காயம் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்தனர். ஆனால் தொடர்ந்து பருவமழை பெய்யவில்லை. குளங்கள் வறண்டு போயுள்ளன. இதனால் தண்ணீரின்றி பெரும்பாலான பயிர்கள் கருகி விட்டன.

**விவசாயிகள் போராட்டம்**

விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். இதனால், தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த கோரிக்கையை

வலியுறுத்தி மாவட்டம் முழுவதும் விவசாயிகள் கருகி பயிர்களுடன் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்ட கலெக்டர் ரவிகுமார் மற்றும் வருவாய் துறை அதிகாரிகளும், வேளாண்மை துறை அதிகாரிகளும் மாவட்டம் முழுவதும் வறட்சி பாதிப்பு குறித்து நேரில் ஆய்வு செய்து வருகின்றனர்.

**70 சதவீதம் பாதிப்பு**

இந்த நிலையில் மாவட்டம் முழுவதும் கடந்த 17–ந் தேதி வரையிலான சேத விவரங்கள் சேகரிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் பாதிப்பு தொடர்பாக முதல்கட்ட அறிக்கை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், கடந்த 20–ந் தேதி அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. இதில் மாவட்டத்தில் சுமார் 70 சதவீதம் பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளதாக, அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**காப்பீடு திட்டத்தில் ஆர்வம்**

தொடர்ந்து வறட்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டவுடன் அடுத்தகட்ட அறிக்கை அரசுக்கு தாக்கல் செய்யப்படும் என அந்த அதிகாரி தெரிவித்தார். அதேநேரத்தில் வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருப்பதால் பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து வருகின்றனர். இது வரை விவசாயிகள் சுமார் ரூ.4 கோடி வரை பிரீமியம் செலுத்தி உள்ளதாக கூறப்படுகிறது.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டு திட்டத்தில் நிவாரணம் வழங்கப்படும் கலெக்டர் தகவல்**



நெல்லை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டு திட்டத்தில் நிவாரணம் வழங்கப்படும் என கலெக்டர் கருணாகரன் தெரிவித்தார்.

<u>செய்தியாளர்களுடன் சென்று ஆய்வு</u>

நெல்லை மாவட்டத்தில் வேளாண்மை மற்றும் வேளாண்துறை சார்ந்த தோட்டக்கலை துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை பொறியியல் துறை வளர்ச்சி பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் கருணாகரன், செய்தியாளர்களுடன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

மானூரை அடுத்த அழகிய பாண்டியபுரம், பனவடலிசத்திரம், குருக்கள்பட்டி சங்கரன்கோவில் ஆகிய இடங்களுக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது கலெக்டர் கருணாகரன் கூறியதாவது:–

<u>மானியம்</u>

வேளாண்மைத்துறையின் மூலம் நெல்பயிர் இயந்திர நடவு செய்திட ஹெக்டேருக்கு ரூ.5000 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. மானூர் தாலுகாவில் 250 ஹெக்டேரும், மாவட்டம் முழுவதும் 4 ஆயிரம் ஹெக்டேர் இயந்திர நடவிற்கு மானியம் வழங்கப்பட உள்ளது. மேலும் பண்ணை குட்டை அமைத்தல். ஆடுகள், நாட்டுக்கோழி வளர்த்தல், மண்புழு உரக்கூடம் அமைத்தல் ஆகிய ஒருங்கிணைந்த

பண்ணைத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியமாக ரூ.55 ஆயிரம் வழங்கப்படுகிறது.

தோட்டக்கலைத்துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனை ஆய்வு செய்தேன். வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் நபார்டு திட்டத்தில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மைய கட்டிடங்கள் சங்கரன்கோவில், குருவிகுளம், தென்காசி, அம்பை ஆகிய ஊர்களில் கட்டடப்பட்டு வருகின்றன.

<u>39 ஆயிரம் விவசாயிகள்</u>

நெல்லை மாவட்டத்தில் பாரத பிரதமர் பயிர் காப்பீட்டுத்திட்டத்தில் இதுவரை 39 ஆயிரம் விவசாயிகள் சேர்க்கப்பட்டு உள்ளனர். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் காப்பீட்டு திட்டத்தின் மூலம் நிவாரணம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும். நமது அணைகளில் உள்ள நீர் இருப்பின் மூலம் இன்னும் 40 நாட்களுக்கு குடிநீர் வழங்கிட முடியும். மழையை பொறுத்து மாற்று நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு கலெக்டர் கருணாகரன் கூறினார்.

ஆய்வின் போது, வேளாண்மை இணை இயக்குனர் கனகராஜ், தோட்டக்கலை துணை இயக்குனர் கண்ணன், வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ரங்கராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு ஒரு வறட்சி மாநிலம்

'சோதனைமேல் சோதனை, போதுமடா சாமி' என்பதுபோல, தமிழ்நாடு இயற்கை பாதிப்பால் மிகவும் அல்லலுற்றிருக்கிறது. தென்மேற்கு பருவமழை ஏமாற்றிவிட்டது. தென்மேற்கு பருவமழையால் நமக்கு மட்டும் பாதிப்பில்லாமல், தமிழ்நாட்டில் ஓடும் பல ஆறுகளுக்கு தண்ணீர் தரும் அண்டை மாநிலங்களிலும் சரிவர பெய்யாததால், தமிழ்நாட்டுக்கு அதன் பாதிப்பு எதிரொலித்தது. அதனால்தான், வழக்கமாக ஜூன் 12–ந் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. அடுத்து வடகிழக்கு பருவமழை கைகொடுக்கும், நம் துன்பங்களெல்லாம் மாறிவிடும் என்று விவசாயிகளும், பொதுமக்களும்

குடிநீருக்காகவும், விவசாயத்துக்காகவும் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். வடகிழக்கு பருவமழை காலம் முடியும் நேரத்தில், இதுவரை மழைபெய்யாத காரணத்தினால் வடகிழக்கு பருவமழையும் பொய்த்துவிட்டது என்றே கூறலாம்.

புத்தாண்டு பிறக்கப்போகிறது. இந்த புத்தாண்டில் குடிநீருக்காகவும், விவசாயத்துக்காகவும் தண்ணீரைத்தேடி என்ன செய்யப்போகிறோம்?, அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? என்பதை நினைத்தால் பயமாக இருக்கிறது. நேற்றைய சூழ்நிலையில், பெரும்பாலான அணைகளில் 30 சதவீதம், ஏறத்தாழ மூன்றில் ஒருபங்குகூட தண்ணீர் இல்லை. மேட்டூர், பவானிசாகர், அமராவதி, பெரியாறு, வைகை, பாபநாசம், மணிமுத்தாறு, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, கிருஷ்ணகிரி, சாத்தனூர், சோலையாறு, பரம்பிக்குளம், ஆழியாறு, திருமூர்த்தி போன்ற பெரிய அணைகளிலுள்ள நீர்மட்டத்தைப்பார்த்தால், ஜனவரிக்கு பிறகு தண்ணீர் இருக்குமோ?, அல்லது விளையாட்டு மைதானம்போல ஆகிவிடுமோ? என்ற ஒரு துயரமான நிலையே நிலவுகிறது. மாநிலம் முழுவதும் விவசாயம் பொய்த்துப்போய்விட்டது. காவிரி டெல்டா மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், ஜூன் 12–ந் தேதி திறக்க வேண்டிய மேட்டூர் அணை 100 நாட்கள் தாமதமாக செப்டம்பர் 20–ந் தேதிதான் திறக்கப்பட்டது, பயிர்கள் எல்லாம் கருகிக்கொண்டிருக்கிறது. நிலத்தடிநீர் வைத்திருப்பவர்கள் மட்டும் கஷ்டப்பட்டு பயிர்களை காப்பாற்ற முயற்சிக்கிறார்கள்.

இந்த நிலையில், தமிழ்நாட்டை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்கவேண்டும் என்று பல்வேறு அமைப்புகள் சார்பில் போராட்டம் நடைபெற்றுவருகிறது. திருவாரூர் கலெக்டர் அலுவலகத்துக்கு முன்பு விவசாயிகள் சங்கம் மற்றும் விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் நடந்த முற்றுகை போராட்டத்தின்போது, மகாலிங்கம் என்ற விவசாயி மாரடைப்பால் இறந்திருக்கிறார். பயிர்கள் கருகுவதைப்பார்த்து மனம் உடைந்ததாலும், தற்கொலை செய்துகொண்டதாலும், 40–க்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிரிழந்த நிலையில், தமிழ்நாட்டை வறட்சியால் பாதித்த மாநிலமாக அறிவிப்பது குறித்து தமிழக அரசு விரைவில் முடிவெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. நாட்டில் நிலவும்

சூழ்நிலையை பார்த்தால், தமிழக அரசும் இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, வறட்சியால் பாதித்த மாநிலமாக அறிவிக்க வேண்டும் என்பது நியாயமாக இருக்கிறது. மத்திய அரசாங்கத்திடம் தேவையான நிவாரண உதவிகளைப்பெற போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால், பருவமழை முடிந்து 50 சதவீதத்துக்கும் குறைவான மழை பெய்தால்தான், வறட்சி மாநிலமாக அறிவிக்க தமிழக அரசு பரிசீலிக்க முடியும். இப்போது ஏறத்தாழ 38 சதவீதம்தான் மழை பெய்திருக்கிறது. அடுத்த 2 நாட்களுக்குள் நிச்சயமாக பெரிய மழைவர வாய்ப்பில்லை. எனவே, நிச்சயமாக வறட்சி மாநிலமாக அறிவிக்க சாத்தியம் இருக்கிறது. மத்திய அரசாங்கத்திடம் நிவாரணம் கேட்கும்போது நிலைமையை ஆராய ஒரு உயர்மட்டக்குழுவை அனுப்பும். அதன்படி, உயர்மட்டக்குழுவிடம் தமிழ்நாடு முழுவதும் நிலவும் வறட்சியைக்காட்டி, மத்திய அரசாங்கத்திடம் பெரும் நிதியை வாங்க தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டும். வறட்சியால் பாதித்த மாநிலமாக அறிவித்தால், விவசாயிகளுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. அவர்கள் வாங்கிய பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்யவோ, அல்லது திருப்பிக்கட்டுவதை தள்ளிவைக்கவோ முடியும். ஏற்கனவே, வங்கிகளில் வாங்கிய பயிர்க்கடன்களை திரும்பச் செலுத்த மத்திய அரசு டிசம்பர் 31–ந் தேதியிலிருந்து மேலும் 2 மாதம் காலஅவகாசம் கொடுத்திருக்கிறது. விளைச்சல் இல்லாத நிலையில், எவ்வாறு பயிர்க்கடன்களை கட்டுவார்கள் என்பதை கருத்தில்கொண்டு, மத்திய அரசாங்கம் தமிழக விவசாயிகளுக்கு பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்யவும் முன்வரவேண்டும்.